1975 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) அரசு தருமபுரி மாவட்டத்தில் நிறைவேற்ற எடுத்துக் கொண்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்த தகவலை மக்களிடையே பரப்புவதற்கு இம்மாவட்டத்தில் 20—9—1974 முதல் 20—10—1974 வரை பல்துறைப் பணிவிளக்க விழா நடத்தப்பட்டது. இந்த விழாவை அதியமான் கோட்டையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் 20—9—1974 அன்று தொடங்கி வைத்தார். இந்த விழாவை நடத்திட அரசு ரூ. 15,000 செலவு அனுமதித்தது.

Milk in Polythene bags.

*576 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether the Dairy Development Corporation proposes to supply milk in Polythene bags in the city of Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பால்வள நிறுவனம் கடந்த 31—3—1975-ம் நாள் முதல் சென்னை மாநகரில் பாலிதின் பைகளில் பால் விற்பனை செய்து வருகிறது. சென்னை மாநகரில் தெரிந்தெடுக்கப்பட்ட பால் விற்பனை நிலையங்களில் பாலிதீன் பைகள் மூலம் பால் விற்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த பை செய்ய எவ்வளவு கிரயமாகிறது? மாதவரத்திலிருந்து கொண்டுவரக்கூடிய பால் நடுவழியில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க என்னமாதிரி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது இந்த பாலிதீன் பைகள் மூலம் பால் வழங்க ப்ரான்ஸ் நாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்களுக்கு சுமார் ரூ. 3.36 லட்சம் செலவாகிறது. ஒரு மணி நேரத்தில் ஒரு லிட்டர் கொள் அளவு உள்ள ஐயாயிரம் பைகளை நிரப்பக் கூடிய திறன் பெற்ற அந்த இயந்திரத்தின் மூலம்,

[மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்] [1975 ஏப்ரல் 7

பாலில் கலப்படம் செய்வதை அந்தப் பாலிதீன் பைகளில் விற்பதால் தடுக்கப்படுகிறது. ஏற்கனவே கண்ணுடிப் புட்டிகளில் வழங்கப்படுவதில் சிலயிடங்களில் சில பேர்கள் கலப்படம் செய்து விடுகிருர்கள் என்று கூறியதால் இந்த பாலிதீன் பைகள் மூலம் விற்பனே செய்வதற்கு இப்போது இம்மாதிரி சில இடங்களில் ஏற்பாடு செய்திருக்கிறேம்.

மாதவரம் பால்பண்ணையிலிருந்து வழங்கப்பட்ட கடன்கள்

*577 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால்பண்ணேயின் மூலம் வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு ?

(இ) அவற்றில் காலங்கடந்த கடன்கள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மாதவரம் பாற்பண்ணேயில் உள்ள உரிமைதாரர்களுக்குக் கடன் வழங்க ரூ. 75,000 தொகைக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் ரூ. 30,000 1973-74-ல் ஆறு உரிமைதாரர்களுக்குத் தலா ரூ. 5,000 வீதம் வழங்கப்பட்டது.

(இ) முந்தைய ஆண்டுகளில் உரிமைதாரர்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ. 20,330 தவணேக் காலம் கடந்து போய் இன்னும் வசூலிக்கப்படாமல் உள்ளது.

Conference of Rehabilitation Commissioners

* 578 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether a conference of Rehabilitation Commissioners of Southern States and the Officers of the Central Departments of Rehabilitation was held at Hyderabad in June 1974;

(*b*) whether any representative of the State Government attended the Conference; and

(*c*) the details of the decision taken at the conference?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.